DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of Judicial Magistrate Court, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 272/2010** |
| Deposition of Witness for | : PW1 |
| Name | : முத்துசாமி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 06.07.2026. |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 06 July 2026.

**எதிரிஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது வாழவந்தான்குளம் வசித்து வருகிறேன். நான் LIC ஏஜென்டாக பணிபுரிந்து ஓய்பு பெற்று தற்போது வயது முதிர்வின் காரணமாக வீட்டில் இருந்து வருகிறேன். எதிரி திருப்பதி ராவ் எனக்கு தெரியும். எனக்கு தம்பி உறவுமுறை கொண்ட ஊமைத்தலைவன்பட்டியை சேர்ந்த மாரியப்பன் என்பவர் மூலம் எதிரி திருப்பதி ராவ் எனக்கு அறிமுகமானார். நான் வெளிநாடு செல்வதற்காக திருப்பதிராவ் என்வரிடம் ரூ.80,000/-த்தை ரொக்கமாக என் தம்பி மாரியப்பன் என்பவரின் மூலம் திருப்பதிராவ் என்பவரிடம்

கொடுத்தேன். அதன்பிறகு எதிரி திருப்பதிராவை பார்க்கமுடியவில்லை. அதன் பிறகு எனது மனைவி உடல்நிலை குறைவால் இறந்துவிட்டார். எனக்கு இந்த வழக்கு பற்றி வேறு எதுவும் தெரியாது.

**(சாட்சி அரசுதரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பகுதி பிறழ்சாட்சியமாக பாவித்துக்கொள்ள அரசுதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதன்படி அனுமதி வழங்கப்பட்டது. )**

**<u>அரசுதரப்பில் குறுக்குவிசாரணை</u>**

நான் போலீசார் விசாரணையில் நான் வேலையில்லாமல் இருந்ததால் என் மாமா குருசாமி என்பவர் மூலம் தெரிந்த மாரியப்பனுக்கு நன்கு அறிமுகமான திருப்பதிராவ் எங்கள் ஊரில் பல நபர்களை வெளிநாட்டிற்கு அனுப்பியதாக கேள்விப்பட்டு கடந்த 20.05.2015–ம் தேதி திருப்பதிராவிடம் ரூ.80,000/–த்தை எனக்காக என் மாமா அவர் வீட்டில்வைத்து பணம் கட்டினார் என்றும், அதைபோல் முனியசாமி, நிறைகுளமும் திருப்பதிராவிடம் பணம் கட்டினார் என்றும், அதன் பிறகு திருப்பதிராவ் வெளிநாட்டிற்கு வேலைக்கு என்னை அழைத்து செல்லாமல் பணத்தையும் திருப்பி தராமல் ஏமாற்றி நம்பிக்கை மோசடி செய்துவந்தார் அதனால் என் மாமா குருசாமி திருப்பதிராவ் மீது தளவாய்புரம் காவல் நிலையத்தில் புகார் மனு கொடுககப்பட்டு கரிவலம்வந்தநல்லூர் காவல் நிலையத்தில் புகார் பதிவு செய்யப்பட்டு வழக்கு சம்மந்தமாக போலிசார் விசாரித்தார்கள் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரியை வழக்கில் இருந்து விடுவிப்பதற்கா பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணைக்கு அனுமதிக்கப்பட்டு சாட்சியை குறுக்குவிசாரணை செய்யவில்லை.**

(Sd/-)M.Mari

Judicial Magistrate,

Sankarankovil.